# EDUCATION LOAN SCHEME OF NSTFDC
# NSTFDC-ன் கல்விக் கடன் திட்டம்
# "Adivasi Shiksha Rrinn Yojana" (ASRY)
# ஆதிவாசி சிக்ஷா ரின் யோஜனா (ASRY)

OBJECTIVE OF THE SCHEME

1.திட்டத்தின் குறிக்கோள்: இந்தியாவில் Ph.D தொழில்நுட்ப கல்வி, தொழிற்கல்வி பயிலும் தகுதியுள்ள மலைவாழ் மக்களுக்கு குறைந்த வட்டியில் கல்விக்கடன் வழங்குவதே இதன் குறிக்கோளாகும்.

**ELIGIBILITY CRITERIA**

2.தகுதி அளவுகோல்:

i) மலைவாழ் மக்கள் சமூகத்தைச் சேர்ந்த மாணவராக இருக்க வேண்டும்.

ii) குடும்ப ஆண்டு வருமானம் வறுமைக் கோட்டு அளவிற்கு இருமடங்கிற்கு மிகாமல் இருக்க வேண்டும். தற்போது இது ஆண்டு வருமானம் கிராமத்திற்கு ரூ. 39,500/-ம் நகரத்திற்கு 54,500/-ம் ஆகும். (இந்தியத் திட்டக் குழு இதை அவ்வப்போது மாற்றியமைக்கும்)

iii) இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனம் / கல்லூரியில் தகுதியுள்ள படிப்புக்கு மாணவர்கள் தகுதிபெற்றவராக இருக்க வேண்டும்.

iv) வேறு எந்த வழியிலும் கல்விக்கான கடன் பெற்றிருக்கக் கூடாது. இதற்கான ஒப்புதல் படிவம் SCA விற்கு தாக்கல் செய்யப்பட வேண்டும்.

**COURSES COVERED**

3.தகுதியான பாடப்பிரிவுகள்:

ICMR / AIBMS / AICTE / UGC மற்றும் மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பயிற்றுவிக்கப்படும் Ph.D உள்ளிட்ட தொழில் கல்வி படிப்புகள், தொழில்நுட்பக் கல்வி படிப்புகள்.

EXPENSES CONSIDERED FOR LOAN

4.கடனுக்கு ஏற்றுக் கொள்ளப்படும் செலவினங்கள்:

கல்விக்கடன் பின்வரும் செலவினங்களை உள்ளடக்கியது. நிறுவனத்திற்குச் செலுத்தும் அனுமதிக் கட்டணம், தேர்வுக்கட்டணம், நூலகக் கட்டணம், ஆய்வகக் கட்டணம் மற்றும் கற்பிக்கும் கட்டணம் ஆகியவை முன்வைப்புத் தொகை, கட்டிட நிதி /

திரும்பப் பெறும் வைப்புநிதி ஆகியவை நிறுவனத்தால் வழங்கப்படும் ரசீதுகளின் அடிப்படையில் மொத்த கல்விச் செலவில் 10 சதவிதத்திற்கும் மேல் இருக்கக் கூடாது.

**உணவு மற்றும் விடுதிக்கட்டணம்:** அரசுக்கல்லூரி/நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் கட்டண அளவே ஏற்றூக்கொள்ளப்படும் தனியார் விடுதியில் தங்கும் கட்டணம் மற்றும் உணவுக் கட்டணங்கள் அரசு கல்லூரிகள்/நிறுவனங்களுக்கு செலுத்தும் கட்டண அளவு பொருந்தும் .கல்லூரி/நிறுவனத்தில் தங்கும் விடுதி இல்லை எனில் மாணவன் தனியார் விடுதியில் தங்கினாலும் அவருக்கு அரசு நிர்ணயம் செய்த துகையே வழங்கப்படும்.ந்த பகுதியில் அரசு விடுதி இல்லை எனிலும் ,அவருக்கு அரசு நிர்ணயம் செய்த துகையே வழங்கப்படும்.

போக்குவரத்து செலவு,புத்தகங்கள்,அலுவலகப் பொருட்கள்,கணனி,உபகரனங்கள்,கருவிகள் போன்றவை கல்விக்குத் தேவையான அடிப்படை தேவைகளுக்கான செலவினங்கள் கல்வி சுற்றுலா,திட்ட அறிக்கை தயாரித்தல் ஆய்வு அறிக்கை தயாரித்தல் போன்றவைகளுக்கான செலவுகள் ஆகியவற்றிற்கு இந்த துகையினை பயன்படுத்தலாம்.

LOAN LIMIT / QUANTUM OF ASSISTANCE

5.கடன் அளவு / உதவியின் அளவு:

ஒரு தகுதியுள்ள குடும்பத்திற்கு அதிகபட்ச கடன் தொகையாக ரூ,5 லட்சம் வரை மாநில / யூனியன் பிரதேச ஒழுங்குமுறை நிறுவனத்தின் வழியாக NSTFDC வழங்கும். அல்லது ஒட்டுமொத்த கல்விக்கான செலவில் 90 சதவீதம் வரை கடனாக வழங்கப்படும்.

மீதமுள்ள 10 சதவீதம் அந்தந்த மாணவர்களினாலோ அல்லது SCA வினாலோ ஏற்றுக்கொள்ளப்படும். இது கல்வி உதவித்தொகைக்கான பயனாளிகளின் பங்களிப்பாக கருதப்படும்.

கல்வி உதவித்தொகை அல்லது வேறு ஏதாவது நிதி உதவி மாணவர்களுக்கு வழங்கப்பட்டால் அது செலவினங்களில் வரவு வைக்கப்படும்.

பயனாளிகளின் பங்களிப்பு அல்லது SCA-ன் பங்களிப்புத் தொகையை அரையாண்டுக்கு ஒருமுறை அல்லது ஆண்டுக்கு ஒருமுறை கடன் விநியோகத்தின் போது ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒன்றுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை தேவைப்பட்டால் NSTFDC –

இடமிருந்து குடும்பத்தின் அதிகபட்சத் தொகையான 5 லட்சத்துக்கு மிகாமல் பெற்றுக்கொள்ளலாம்.

RATE OF INTEREST

6.வட்டி விகிதம்:

NSTFDC தனது பங்களிப்பிற்காக ஆண்டிற்கு 3 சதவீதம் வட்டியாக வசூலித்துக் கொள்ளும். அதே நேரத்தில் SCA பயனாளிகளிடமிருந்து 6 சதவீதம் வரை வசூலித்துக் கொள்ளலாம்.

MORATORIUM / REPAYMENT PERIOD

7.தவணை தொடங்கும் காலம் / திரும்பச் செலுத்தும் காலம்:

தவணை தொடங்கும் காலம்: படிப்புக்காலம் முடிவுற்ற தேதியிலிருந்து ஓராண்டு அல்லது பணியில் சேர்ந்ததிலிருந்து ஆறுமாதம் இதில் எது முதல் வருகிறதோ அதுவே வட்டியுடன் கடன் தவணை செலுத்தத் தொடங்கும் காலமாகும். ஆனாலும் முதல் கடன்தொகை வழங்கப்பட்ட தேதியிலிருந்து வட்டி கணக்கிடப்படும்.

திருப்பிச் செலுத்தும் காலம்:

i) தவணை தொடங்கும் காலத்திலிருந்து அதிகபட்சம் ஐந்து ஆண்டுகளுக்குள் காலாண்டுக்கு ஒருமுறை என்ற தவணை முறையில் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். எப்படியிருப்பினும் NSTFDC – யிடமிருந்து SCA-வுக்கு முதல் கடன்தொகை வழங்கப்பட்ட தேதியிலிருந்து பத்து ஆண்டுகளுக்குள் படிப்புக்காலம் மற்றும் தவணை தொடங்கும் காலம் உள்பட கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும்.

ii) இடைநின்ற மாணவர்களுக்கு, அவர்கள் கல்லூரி / நிறுவனத்திலிருந்து இடைநின்ற காலத்திலிருந்து ஆறுமாதம் கழித்து தவணை செலுத்தத் தொடங்க வேண்டும். அதிகபட்சமாக 20 காலாண்டுத் தவணைகளில் கடன் செலுத்தப்பட வேண்டும்.

**RELEASE OF FUNDS, SUBMISSION OF FUND UTILISATION AND PROGRESS REPORTS**

8.நிதி ஒதுக்கல், நிதிப் பயன்பாடு மற்றும் முன்னேற்ற அறிக்கை சமர்ப்பித்தல்

A. நிதி ஒதுக்கல்

i) மாநில அரசின் உத்திரவாதம் மற்றும் பயன்பாட்டு நிபந்தனைகள், ஏற்கனவே உள்ள கடனை திருப்பிச் செலுத்துதல் போன்றவைகளை கொண்டு NSTFDC யானது நிதியை SCA க்கு ஒதுக்கீடு செய்யும்.

ii) SCA செய்ய வேண்டியவை.

a) கல்லூரி / நிறுவனத்திற்கு நிதி வழங்குதல்: கல்லூரி / நிறுவனத்தால் வழங்கப்பட்ட செலவினப் பட்டியலை பயனாளி SCA க்கு அளிக்க வேண்டும். அதனடிப்படையில் SCA நேரடியாக அந்த கல்வி நிறுவனத்திற்கு / கல்லூரிக்கு நிதியை அனுப்பி வைக்கும்.

b) மதிப்புமிக்க பொருட்களுக்கான செலவினங்களுக்கு நிதியளிக்க, SCA நேரடியாக அந்த விற்பனையாளர் அந்த நிறுவனத்திற்கு இயன்றவரை வழங்கிவிடும். அல்லது பயனாளி செலவு செய்த ரசீதுகளின் அடிப்படையில் அவருக்கு திருப்பி அளிக்கப்படும்.

c) கடன் நிதி உதவி அனுப்புவதற்கான காலம் அந்தந்த கல்லூரி / நிறுவனத்தின் தேவைகளைப் பொறுத்து அமையும்.

iii) SCA அந்தந்த கல்லூரி / நிறுவனத்திற்கு பயனாளியின் சார்பாக கடிதங்கள் அனுப்பி கடன் உதவிக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளும்.

B) நிதிப் பயன்பாடு:

SCA வானது NSTFDC யிடமிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் அந்த நிதியை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அந்தந்த கல்லூரி / நிறுவனத்திற்கு கட்டணம் செலுத்த வேண்டிய கடைசி தேதிக்குள் கட்டணம் செலுத்தி இருக்க வேண்டும்.

C) முன்னேற்ற அறிக்கை சமர்ப்பித்தல்:

NSTFDC யிடமிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட தேதியிலிருந்து 90 நாட்களுக்குள், நிதிப் பயன்பாட்டு அறிக்கையினை அதற்குரிய ரசீதுகள், மற்ற அனைத்து ஆவணங்களுடன் SCA வானது சமர்ப்பிக்க வேண்டும். மேற்சொன்ன நிதிப் பயன்பாட்டு அறிக்கை சமர்ப்பித்த பின்னர்தான் அடுத்த தவணைத் தொகை NSTFDC யால் ஒதுக்கீடு செய்யப்படும்.

**REQUIREMENTS TO AVAIL EDUCATION LOAN:**

**9.கல்விக்கடன் பெற தேவையானவைகள்:**

i) விண்ணப்பிக்கும்  முறை:  மாணவர்கள் அவர்கள் சார்ந்த மாநில / யூனியன் பிரதேசங்களில் உள்ள SCA வழங்கியுள்ள படிவத்தில் SCA வுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

ii) ஒப்புதல்:  வேறு எந்தவிதமான கல்விக்கடனும் பயனாளியால் இதுவரை பெறப்படவில்லை என்ற ஒப்புதலை மாணவர்கள் SCA வுக்கு வழங்க வேண்டும்.

iii) விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டிய சான்றொப்பமிட்ட ஆவணங்கள்.

- தகுதியான அலுவலர்களால் வழங்கப்பட்ட மலைவாழ் மக்கள் சான்றிதழ்
- தகுதியான அலுவலர்களால் வழங்கப்பட்ட வருமானச் சான்றிதழ்
- பிறந்த தேதியுடன் கூடிய பள்ளி மாற்றுச் சான்றிதழ்
- கல்வித் தகுதிச் சான்றிதழ்கள், பத்தாம் வகுப்பு, +2, பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு
- ஓராண்டிற்கான கல்விக் கட்டண விவரங்களுடன் (அரையாண்டு, ஆண்டு) கூடிய கல்லூரி அனுமதிச் சீட்டு.
- ஏற்கனவே மாணவர் கல்வி நிறுவனத்தில் சேர்ந்திருந்தால் அந்நிறுவனத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை நகல்.

iv) ICMR / AIBMS / AICTE / UGC மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரி / பல்கலைக் கழகங்களில் அங்கீகரிக்கப்பட்ட பாடப் பிரிவுகளில் பயிலும், தகுதியுள்ள மாணவர்களுக்கு NSTFDC கல்விக் கடன்களை வழங்கும்.

SCA விற்கு திருப்திப்படும் மாணவர்களுக்கே கல்விக் கடன்கள் வழங்கப்படும்.

v) தகுதியுள்ள நபர்களுக்கு கடன் உறுதி செய்யப்பட்டு உடனுக்குடன் தெரிவிப்பதோடு SCA உடனடியாக அதை வழங்கவும் ஆவண செய்ய வேண்டும்.

**MONITORING OF SCHEME**

**10. திட்டத்தை கண்காணித்தல்:**

i) SCA விற்கு தேர்வு முடிவின் நகலை அளித்தல்:  கடன் பெறுபவர் ஒவ்வோர் ஆண்டும் அந்த ஆண்டின் தேர்வு முடிவுகளுக்கான சான்றிதழை SCA விற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

ii) பட்டம் / சான்றிதழின் மீது குறித்தல் / மேலொப்பமிடுதல்: படிப்புக் காலம் முடிந்ததும் கடன் பெறுபவர் அவரது உண்மைச் சான்றிதழை / பட்டச் சான்றிதழை கடன் பெற்றமைக்காக மேலொப்பமிடுவதற்காக SCA விடம் ஒப்படைப்பேன் என்ற ஒப்புதல் படிவத்தை வழங்க வேண்டும்.

iii) ஒவ்வோர் ஆண்டும் SCA வானது அந்தந்த கல்லூரி / நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை மற்றும் நிலுவைத் தொகை பற்றிய தகவலை தெரிவிக்கும்.

iv) SCA கடன் பெற்றவர்களின் சான்றிதழ்கள் மீது பெற்ற கடன் தொகை, கட்ட வேண்டிய பாக்கித் தொகை ஆகியவற்றைக் குறிக்கும்.

11. வருமானத்தைப் பெருக்கும் செயல்பாடுகளுக்கான கடன்கள்:

i) கல்விக் கடன் பெற்றவர்கள் படிப்புக் காலம் முடிந்த பிறகு, அவர்களின் குடும்ப ஆண்டு வருமானம் வறுமைக் கோட்டு வரம்புக்கு இரண்டு மடங்குஅளவு இருப்பின், அவர்கள் வருமானத்தைப் பெருக்கும் செயல்பாடுகளான சுய வேலைவாய்ப்புக்காக கடனைப் பெற SCA விற்கு விண்ணப்பிக்கலாம். இந்தக் கடன் NSTFDC ன் திட்டங்களில் உள்ள தனி நபர் கடனாகக் கருதப்படும்.

ii) ஏற்கனவே உள்ள கடனோடு வருமானத்தைப் பெருக்குவதற்கான செயல்பாடுகளின் கடன்அளவு:

கல்விக்கடன் மற்றும் சுய வேலைவாய்ப்புக்கடன் இரண்டும் சேர்ந்து ஒரு குடும்பத்திற்கு அதிகபட்சமாக 10 லட்ச ரூபாய் என்ற அளவில் வழங்கப்படும். இத்தொகையில் 10 சதவீதத் தொகையை SCA வானது அதனது பங்களிப்பாகவோ, மானியமாகவோ அல்லது கடனாளிகளின் பங்களிப்பாகவோ இருக்கலாம்.

iii) ஒருவேளை வருமானத்தைப் பெருக்கும் சுய வேலைவாய்ப்புக் கடனை ஒருவர் பெற்றிருந்தால், அவர் ஏற்கனவே பெற்றிருக்கும் கல்விக்கடன் தொகையையும் சேர்ந்து மொத்தத் தொகைக்கும் வட்டி கணக்கிடப்படும். மொத்தத் தொகை ரூ. 5 லட்சம் வரை இருந்தால் NSTFDC ஆண்டுக்கு 3 சதவீத வட்டியை SCA விடமிருந்தும், அதே நேரத்தில் SCA 6 சதவீத வட்டியை கடனாளிகளிடமிருந்தும் பெற்றுக் கொள்ளும். மொத்தத் தொகை 5 லட்சத்திற்கும் மேல் இருந்தால் NSTFDC ஆண்டுக்கு 5 சதவீத வட்டியை SCA விடமிருந்தும், SCA 8 சதவீத வட்டியை பயனாளிகளிடமிருந்தும் பெற்றுக் கொள்ளும்.